# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# எம்.சி.ஓ.பி. எண். 117/2019

2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10ம் நாள் வெள்ளிக்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10வது விதி 4ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. சிவஞானம் | | |
| த/பெ. | சின்னசாமி | வட்டம் | பொன்னேரி |
| கிராமம் | கேசவபுரம் | வயது | 63 |
| தொழில் | ஓய்வு | மாவட்டம் | திருவள்ளூர் |

**முதல் விசாரணை**

1. நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தயும் நான் நன்கு அறிவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தாயரிக்கப்பட்து அந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடைய தான். ம.சா.ஆ 1 முதல் 8வரை எனது தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்யதுள்ளேன். **ம.சா.ஆ.3 ஆவணம் விபத்து சம்பந்தப்பட்ட லாரிக்கு உரியது அல்ல என்று கூறி எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டதால் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>என் தரப்பு சான்று ஆவணங்கள்</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ 1 | முதல் தகவல் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ 2 | பதிவு புத்தக நகல் |
| ம.சா.ஆ 3 | காப்பீட்டு நகல் |
| ம.சா.ஆ 4 | 1ம் எதிர் மனுதாரரின் ஓட்டுநர் உரமம் நகல் |
| ம.சா.ஆ 5 | விபத்து பதிவேடு நகல் |
| ம.சா.ஆ 6 | ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ 7 | மருத்துவ விடுவிப்பின் சுருக்கம் அசல் |
| ம.சா.ஆ 8 | ஓட்டுநர் உரிமம் (மனுதாரருடையது) நகல் |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

16.02.2019 அன்று மதியம் 12.30 மணிக்கு மணலி புது நகர் பால் பூத்து அருகே நான் சென்னையிலிருந்து திரும்பி கார் ஓட்டிக்கொண்டு வந்து போது மாடு குறுக்கே வந்ததால் நான் இடது புறம் திருப்பிதால் அங்கே நிறுத்தி வைத்திருந்த லாரியின் பக்கவாட்டில் மோதிவிட்டேன். மாடு குறுக்கே வராவிட்டால் விபத்து நடந்திருக்காது என்றால் சரிதான். மாட்டின் மீது மோதாமல் இருக்க நான் எனது வாகனத்தை திடீரென்று திருப்பியதால் விபத்து நடந்தது என்றால் சரிதான். நான் தண்டையார்பேட்டை அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். டிஸ்சார்ஜ் சம்மரியில் எனக்கு மார்பில் ரத்துக்கட்டு ஏற்பட்டதாக குறிப்படப்பட்டுள்ளது என்றால் சரிதான். வேறு காயங்கள் ஏற்பட்டதாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். நான் நீரிழிவு நோயாளி என்பதால் அதற்குரிய மருந்துகள் மற்றும் வலி நிவாரண மருந்துகளை பரிந்துரை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். தற்போதும் எனக்கு மார்பில் வலி உள்ளது. நான் மேற்கொண்டு சிகிச்சை பெற்றதற்கு ஆவணம் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்டது சாதாரண காயம் என்றும் இழப்பீடு பெற நான் மிகைப்படுத்தி கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த காப்பீடு நகல் லாரியின் காப்பீடு இல்லை என்றால் சரியல்ல. காப்பீடு நகல் போலியானது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி